2nd August 1966]

மயிலாப்பூரில் ஸ்கூட்டர் விபத்து

*24 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மயிலை ஆர். கே. மடம் ரோட்டில் 4-2-1966 அன்று நண்பகல் 2 மணிக்கு ஸ்கூட்டர் MSV 706 ஒருவரை மோதியது சம்பந்தமாகப் புகார் ஏதேனும் செய்யப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம்.

(இ) இராமகிருஷ்ண மடத்துச் சாலையும் தெற்கு மாட வீதியும் சந்திக்குமிடத்தில் 4-2-1966 அன்று MSV 706 எண் கொண்ட ஒரு ஸ்கூட்டரும் ஒரு சைக்கிளும் மோதிக்கொண்டதினால் விபத்து ஏற்பட்டது. ஸ்கூட்டர், சைக்கிள் ஓட்டியைக் கீழே தள்ளியதால் அவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. ஸ்கூட்டர் ஓட்டி மீது சைதாப்பேட்டை 3-வது மாகாண மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஸ்கூட்டர் ஓட்டி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது.

தனியார் துறை பஸ்களில் கட்டண உயர்வு

*25 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள தனியார் துறை பஸ்களில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்தியது உண்மையா?

(இ) ஆமெனில், பஸ் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம்; வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட பஸ் முதலாளிகள் 1966 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பஸ் கட்டணத்தை உயர்த்தினர்; ஆனால், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பஸ் முதலாளிகள் 1966 மார்ச் மாதத்தில்தான் பஸ் கட்டணத்தை உயர்த்தினர்.

(இ) ஆம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்த பஸ் கட்டணத்தை உயர்த்தாமலே, முன்பு போட்டிருந்த கட்டணத்தை வசூலித்தே நடத்தினால் கூட கட்டுபடி ஆகும்; ஆனால் அரசாங்கம் தான் வற்புறுத்தி உயர்த்தச் சொன்னதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் வற்புறுத்த வேண்டிய நிமித்தம் இல்லை. இதற்கு மேல் போகாமல் கட்டணம் விதிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. அந்த அளவில் பாதி

அளவுக்குத் தான் கட்டணம் விதித்துக்கொண்டிருந்தார்கள். வரி உயர்த்தப்பட்டதும் அவர்கள் ஓரளவு கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நடத்தப்படும் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணம், தனியாரால் நடத்தப் படும் எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணத்தை விட அதிகமாக இருக்கிறதே, அதன் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, எல்லா பஸ் முதலாளி களும் அரசாங்கம் அனுமதித்திருக்கும் உச்ச வரம்பு அளவுக்குக் கட்டணத்தை விதித்த பிறகும், ஒரு தனிப்பட்ட பஸ் முதலாளி தான் பழைய சார்ஜுக்கே ஓட்டுகிறேன் என்று சொல்லியும் கேட்காமல் அரசாங்கம் அவர் மீது நடவடிக்கை எடுத்திருப்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 'அரசாங்கம் ஒன்றும் உயர்த்தும்படி சொல்லவில்லை' என்று சொன்னார்கள். அரசாங்கம் உயர்த்தச் சொல்லி வற்புறுத்தியதாக ஒருவர் இப்போது கேஸ் போட்டிருக்கிறார். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், ஒரு மைலுக்கு இவ்வளவு கட்டணம் வசூலிக்கவேண்டும் என்று சர்க்கார் நிர்ணயித்திருப்ப தில் இத்தனை காசிலிருந்து இத்தனை காசு வரை வாங்கலாம் என்று இருப்பதால் இவ்வளவு குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதற்கு பதிலாக ஒரு மைலுக்கு இத்தனை தான் வாங்கவேண்டுமென்று நிர்ணயித்தால் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

Wind mills for irrigational purposes

* 26 *Q.*—SRI V. SANKARAN,
SRI T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any of the experts has been requested to investigate and report on the installation of wind mills and utilisation of wind power for irrigational pumping; and

(*b*) if so, the details thereof?